திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ஒன்று இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்பள்ளிக்கு அரசாங்கத்திடமிருந்து மானியம் கொடுக்கப்படுகிறதா என்பதை பற அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, தற்போது அரசாங்கத்தின் மூலம்தான் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 23,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, தற்போது மானியத்திற்காக செலவழிக்கப்படும் தொகை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, அதுபற்றி விளக்கமான, விரிவான குறிப்பு இல்லை என்றாலும் அங்கே பயிலுகிற மாணவர்கள் 147 பேர் இருக்கிறார்கள். பொதுவாக பள்ளி ஆசிரியர்களுக்கு மாத ஊதியமும், கடைநிலை ஊழியருக்கு மாத ஊதியமும், மாணவர்களுக்கு மாதம் 30 ரூபாயும் ஆக இப்படி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் மொத்த மானியம் 23,600 ரூபாய்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கேள்வி எண்கள் 678, 679, 680 ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) மாண்புமிகு பேரவைத் தலைவரின் 60-வது பிறந்தநாளையொட்டிய பாராட்டுரைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நம்முடைய பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இன்றைய தினம் 60-வது வயதை அடையும் நாளாகும். இந்த நன்னாளில் அவருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நன்னாளையொட்டி அவர்கள் நமக்கெல்லாம் திருக்குறள் தெளிவுரை என்னும் புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, பொதுவாக சட்டசபை நடக்கும்போது அவர்கள் இங்கே வந்திருந்து 60 வயதாகிறது என்று சொன்னால் நாம் அவருக்கு ஏதாவது சொல்ல முடியும். இருந்தபோதிலும் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இங்கே வராதது குறை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு 60-வது பிறந்த தின விழாவிலே நாம் எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சி உடையவர்களாக இருக்கிறோம். அன்னார் அவர்கள் நீண்ட ஆயுளும் நல்ல கருத்து நிரம்பிய ஒரு சபாநாயகராக இருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பாக அன்னாருக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நமது மாண்புமிகு அவைத் தலைவர் புலவர் அவர்களுடைய 60-வது ஆண்டு நிறைவு தினமாகிய இன்று அவர்கள் எல்லா நலன்களையும் பெற்று வாழ்வதற்கு எங்கள் கட்சி சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களுக்கு 60-வது ஆண்டு நிறைவு பெற்றிருக்கிறது என்பதை அறிந்து நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். எங்கள் கட்சி சார்பாக அவர்களுக்கு நல்வாழ்த்துக்களை இந்த நேரத்தில் கூறுவதோடு, புலவர் கோவிந்தன் அவர்கள் நல்ல தமிழ்ப்பற்று உடையவராகவும், தமிழ்ப் பெருந்தகையாகவும் திகழ்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பெருந்தகை இன்னும் பல்லாண்டு காலம் நல்ல சேவை செய்து வாழவேண்டுமென்றுவேண்டி அமர்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, நமது மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் புலவர் அவர்களுடைய 60-வது பிறந்த நாளில் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அன்னாருக்கு எங்களுடைய உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நம்முடைய சட்டப் பேரவையின் தலைவர் மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் 60வது வயதை எட்டியிருக்கின்ற இந்த நன்னாளில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துக்களை மனப்பூர்வமாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டிற்குத் தந்த சுயமரியாதை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு நாட்டிலேயிருக்கிற சுய மரியாதை எண்ணங்களை நாட்டு மக்கள் மத்தியிலே பாராட்டுகிற வகையில் ஈடுபடுத்திக் கொண்டு நீண்ட காலமாக செய்யாறு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த

[திரு. க. உரோ. எட்மண்ட்]

தொகுதி மக்களுக்கும், இந்தச் சட்டமன்றத்தின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டதன் மூலம் தமிழக மக்களுக்கும் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொணடு சீரிய பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் நீண்ட காலம் வாழவேண்டுமென்று வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, பேரவைத் தலைவரவர்களுக்கு 60 வயது ஆகிறது என்று இங்கே சொன்னார்கள். அவர்களுக்கு எங்கள் கட்சி சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் பேரவைத் தலைவர் திரு. புலவர் அவர்களுக்கு நானும் எங்கள் கட்சியின் சார்பில் வாழ்த்துக்கள் கூறுகின்ற முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு மாமன்றத்தின் தலைவர் எத்துணை பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டுமோ அத்துணை பொறுப்புணர்ச்சியோடு தம் பொறுப்புக்களை, தாம் பெற்ற அனுபவங்களை முறையாகப் பயன்படுத்தி, தாம் கற்றுத் தெளிந்த பல நூல்களின் தெளிவில்—தகுந்த வயதோடு—நிறைந்த மதிப்போடு—மிகச் சிறப்பாக ஆற்றி வருகிறார்கள். இந்த மாமன்றத்திற்கு 3 முறை தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருக்கிறார். இது அவர்களது தொகுதி மக்கள் அவரிடத்து வைத்திருக்கிற பெரு மதிப்பைக் காட்டுகிறது. அவர்களுடைய வாழ்வே வரலாற்றைக் கொண்டதாக அமைந்தது. உண்மையில் பெருமைக்குரியவர்—பாராட்டுக்குரியவர்—இன்றைக்கு அவருக்கு 60 ஆண்டுகள் ஓடியிருக்கின்றன என்றால் இதில் ஏறத்தாழ 30 ஆண்டுகள் பொதுவாழ்விலேயே ஈடுபட்டு மக்களுக்குத் தம்முடைய உழைப்பை எல்லாம் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட தலைவர் இன்றைக்கு ஜனநாயக மரபுகளை ஒட்டி, சட்டவிதிகளை ஒட்டி இந்த மன்றத்தை நடத்திச் செல்கிறார். ஆளுங்கட்சியினர்களும் சரி, எதிர்க்கட்சியினர்களும் சரி நியாயந் தவறி நடக்காத அளவுக்கு தலைவர் என்ற முறையில் நடுநிலைத் தராசுபோல இருந்து தம்முடைய தீர்ப்புகளை வழங்கி வருகிறார்கள். அவர்கள் மேலும் பல்லாண்டு—பல்லாண்டு நூறாண்டு வாழ்ந்து பொதுமக்களுக்குப் பணிபுரிய வேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, அவர்களுக்கு ஆண்டவனும் அருளவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனிய இயல்பும், எளிய வாழ்வும், எழிலார்ந்த தமிழும் கொண்டு தமிழ்ச் சமுதாயப் பெருங்குடி மக்களுடைய உள்ளத்திலெல்லாம் நல்லிடத்தைப் பெற்றிருக்கிற சட்டப் பேரவையின் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் 60 ஆம் ஆண்டினை இன்றையதினம் தொடங்கியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதோடு அவர் பல்லாண்டு காலம் வாழவேண்டு மென்று தமிழ் மக்கள் சார்பாகவும், இந்த அவையின் சார்பாகவும் அவை முன்னவரின் சார்பாகவும் என்னுடைய வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது சட்டப் பேரவைத் தலைவர் தம்முடைய 60-வது ஆண்டினைத் துவங்கியிருப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். சட்டப் பேரவைத் தலைவர் இங்குள்ள உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒரு அருமையான புத்தகத்தைத் தந்திருக்கிறார்கள். நான் அதற்காக இந்தச் சபை உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு மகிழ்ச்சியான செய்தி.

மேலவைத் தலைவர் அவர்களுக்கு சில நாட்களுக்கு முன்பு தான் 70 ஆம் ஆண்டு தொடங்கியதற்காக பாராட்டு விழா நடைபெற்றது. இரண்டு மூன்று நாட்களில் நமது பேரவைத் தலைவருக்கு 60 ஆம் ஆண்டு தொடக்கப் பாராட்டு நடைபெறு கிறது. இதற்காக மெத்த மகிழ்ச்சி—மேலவைத் தலைவரை விட பத்து வயது இளைய நமது பேரவைத் தலைவர் நமது பாராட்டுதலைப் பெறுவதோடு அவை உறுப்பினர்களுக்கு நல்ல தொரு புத்தகத்தை அளித்ததற்காக என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை மத்திய நூலக கட்டடத்தருகில் வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டதும் அதனால் ஏற்பட்ட பீதியும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்ததாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு ஜேம்ஸ் அவர்களும்

'Serious situation arising out of the discovery of a military live bomb near the Central Library building, Madras which if exploded could blow up 100 sq. ft. area and there is fear of likely bomb incidents near tall buildings in the City'

என்ற பொருள்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத் திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவா திப்பதற்கு முக்கியமானது என்பதை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.